புதிய அவையம்
PUTHIYA AVAIYAM (PEER- REVIEWED JOURNAL)
ISSN : 2456-821X
(vol. 9 Issue: 01 June 2025)

==============================================================

# நற்றிணை – பெயர்,வினை எச்சங்களின் ஆளுமை

==============================================================

முனைவர்ஜெ.ஜெயசித்ரா
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
தூயநெஞ்சக்கல்லூரி
திருப்பத்தூர்.

**ஆய்வுச்சுருக்கம்**

சாகாவரம் பெற்ற சங்க அக இலக்கிய நூல்களுள் ஒன்று நற்றிணை.இது நாலடி வெண்பாவினுல் முதலிடம் பெறும் சிறப்பினை உடையது.அத்தகைய சிறப்பினை உடைய நற்றிணைப் பாடல்களில் மனிதகுல வாழ்வியலின் விழுமியங்களான காதல், வீரம்,நம்பிக்கைகள், விளையாட்டுகள், சடங்குகள், பண்பாடுகள் போன்றவற்றை இலக்கியச் சுவைத் ததும்ப எடுத்துரைக்கின்றது.எள்ளினின்று எண்ணெய் எடுப்பது போல இலக்கியத்தினின்றும் எடுப்பது இலக்கணம் என்பதற்கு ஏற்ப நற்றிணைப் பாடல்களிலிருந்து ஏராளமான இடங்களில் இலக்கண கூறுகள் காண்படுகின்றன.அவற்றுள் பெயர்,வினை எச்சங்கள் குறித்து பரவலாக இடம் பெற்றுள்ளன. இவ் எ்சங்கள் பற்றி தொல்காப்பியம், நன்னூல் போன்ற இலக்கண நூல்களில் குறிப்பிட்டுள்ளது.ஆகவே இலக்கண நூல்களில் கூறப்பட்டுள்ள எச்சப் பெயர் வகைகளும் நற்றிணையில் இடம்பெற்றுள்ள எச்சப் பெயர் வகைகளும் ஒன்றிப் போகிறதா? அல்லது வேறுபட்டு நிற்கின்றதா? என்பதை ஆராய்வதாக இக்ககட்டுரை அமைகிறது.

**முன்னுரை**

நானூறு பாடல்களைக் கொண்டு **நற்றிணைநானூறு** என விளங்கும். இந்நூல் 4அடி சிற்றெல்லையும் 8அடி பேரெல்லையும் பெற்று திகழக்கூடியது.இதனைத் தொகுப்பித்தவன் பன்னாடு தந்த பாண்டியன் மாறன்வழுதி ஆவார்.நற்றிணை-400 பாடல்களில் பெரும்பான்மையான பாடல்களில் அளபெடைகள், பெயரெச்சங்கள், வினையெச்சங்கள், இடைச்சொற்கள், உரிச்சொற்கள், உவமைகள் என பல்வறு இலக்கணக் கூறுகளும் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் பெயரெச்சங்கள் ,வினையெச்சங்கள் நற்றிணைப் பாடல்களில் எவ்வாறு கையாளப்பட்டுள்ளது என்பது குறித்து மட்டும் இக்கட்டுரை விளக்கி ஆராய்கிறது.

**எச்சம் – விளக்கம்**

இலக்கியங்களில் இடம்பெறும் சொல்லோ, சொல்லின் பொருளோ முழுமைப் பெறாமல் குறித்து நிற்பதை **எச்சம்** என்னும் சொல்லால் குறிப்பிடுகிறது இலக்கணம். இதனை **எஞ்சுப் பொருட்கிளவி** என்று தொல்காப்பியம் **அழைக்கின்றது.**அதாவது எஞ்சிய, சொல்லாமற் குறைப்பட்ட பொருளைக் குறிக்கும் சொல் என்பது இதன் பொருள்.

**எச்ச வகைகள்**

எச்சம் இருவகைகளைக் கொண்டு முடியும். அவை பெயர்ச் சொல் எச்சத்தைக் கொண்டு முடிந்தால் பெயரெச்சம்.வினைச்சொல் எச்சத்தைக் கொண்டு முடிந்தால் வினை எச்சம் ஆகும்.

**எ.கா – 1.உண்ட குதிரை –** இதில் **குதிரை** எனும் பெயர் **உண்ட** எனும் எச்சம் பெற்று வந்துள்ளது.

2.**உண்டு வந்தான் –** இதில் **வந்தான்** எனும் வினை **உண்டு** எனும் எச்சம் எற்று வந்துள்ளது.மேலும்,

தொல்காப்பியம் இதனைப் பத்து வகையாகப் பகுத்துக் காட்டுகிறது.அவையாவன,

**1.பெயர் எச்சம்,2.வினை எச்சம்,3.பிரிநிலை எச்சம்,4.ஒழியிசை எச்சம்,5.எதிர்மறை எச்சம்**

**6.உம்மை எச்சம்,7.என எச்சம்,8.சொல் எச்சம்,9.குறிப்பு எச்சம்,10.இசை எச்சம்**

**பெயரெச்சம்**

பெயர்ச் சொல்லைக் கொண்டு முடியும் எச்சச் சொல் பெயரெச்சம்.அது வினைப் பகுதி,காலம் காட்டும் இடைநிலை,பெயரெச்ச விகுதி ஆகியவற்றை உடையதாய் அமையும்.பெயரெச்சம் காலமும் செயலும் காட்டும் தன்மையுடையது.

**படித்த பாடம் –** இதில், **படித்த** என்பது - இறந்த காலத்தையும்,படித்தல் எனும் செயலையும் காட்டி நிற்கின்றது. அவை இரண்டு வகைப்படும்.

**1.தெரிநிலை் பெயரெச்சம்** – காலம் காட்டும்,செயலையும் உணர்த்தும்.அறுவகைப் பொருட் பெயகளுள் ஒன்றினைக்கொண்டு முடியும்.

**2.குறிப்புபெயரெச்சம்** – இதில் பொருள் முடிவு பெறவில்லை.ஆனால் காலத்தையும்,செயலையும் உணர்த்தி நின்று மாணவன் என்னும் பெயர்ச் சொல்லைக் கொண்டு முடிந்துள்ளன.இவ்வாறு காலத்தையும் செயலையும் உணர்த்தி நின்று செய்பவன், கருவி, நிலம் ,செயல், காலம், செய்பொருள் என்ற ஆறில் ஏதேனும் ஓன்றைக் கொண்டு முடியும்.காலம் மற்றும் செயலை உணர்த்தாமல் பண்பினை மட்டும் உணர்த்தி பெயர்ச் சொல் கொண்டு முடிந்தால் குறிப்பு பெயரெச்சமாகும்.

**நல்ல ஆசான்,அழகிய பறவை –** இதில் நல்ல,அழகு என்பன பண்பினை மட்டும் குறித்து நின்றது.

**பெயரெச்ச வடிவங்கள்**

பெயரெச்சம் **செய்த, செய்கின்ற, செய்யும்** என்னும் மூன்று வடிவங்களில் அமையும்.இவ்வடிவங்களை வாய்ப்பாடுகள் என்று அழைப்பர்.இதில்,

**செய்த** - இறந்த காலத்தைக் காட்டும் – **எ.கா : படித்த சிறுவன்**

**செய்கின்ற – கிறு,கின்று,ஆநின்று** என்னும் இடைநிலைகளால் நிகழ்காலத்தைக் காட்டும்.இவற்றுள் ஆநின்று வழக்கத்தில் இல்லை.

**எ.கா : உண்ணுகிற சிறுவன்,உண்ணுகின்ற சிறுவன்,உண்ணா நின்ற சிறுவன்**

**செய்யும் – 'உம்'** எனும் விகுதியைப் பெற்று எதிர்காலத்தை உணர்த்தும்.

**எ.கா : படிக்கும் சிறுவன்,பாடும் சிறுமி**

**நற்றிணையில் – பெயரெச்சம்**

**செய்த**

**‘செய்த’** எனும் வாய்ப்பாட்டின் படி முடியும் சொற்கள் இறந்தகாலத்தையும், செயலையும் காட்டி நிற்கும் என்பதனை முன்னரே கண்டோம். அதனடிப்படையில் நற்றிணைப் பாடல்களில் **‘செய்த’** எனும் பெயர்ச்சொல் எங்ஙனம் இடம்பெற்றுள்ளது என்பதைக் குறித்து இவ்விடம் ஆராய்கிறது.

**திரை அணற் கொடுங் கவுள் நிறைய முக்கி**

**வான்பெயல் நனைந்த புறத்த நோன்பியர் (நற். 22-5,6)**

மழைபெய்தலால் குரங்கின் புறப்பகுதி நனைந்திருந்தது என்று பொருளில் வந்துள்ளது.இதில் **நனைந்திருந்தது என்பது இவ்விடத்தில்** இறந்தகாலத்தையே குறித்து நின்றது என்பதை உணர முடிகின்றது.

மேலும்

**தெண்நீர் மலரின் தொலைந்த**

**கண்ணே காமம் கரப்ப அரியவ்வே (நற்.23-8,9)**

அதாவது தெளிந்த நீரில் உள்ள மலர் போன்ற இவள் கண்கள் அழகு **குலைந்தன.**எனவே அக்கண்கள் காமத்தை மறைக்க அரியனவாய் அமைந்தன.

**பால்பக வீழ்ந்த வருடைய விழுக்கோட்டு ( நற்.24-1)**

நிலம் பிளவுபடுமாறு **இறங்கிய** வேரையும் பெருங்கிளையும் உடையமரம் என்று பொருள் தருகின்றது.**ஆடுகழை நிவந்த பைங்கண் மூங்கில்(28-7)**

அசைகின்ற **தண்டுயர்ந்த** கணுக்களைக் கொண்ட மூங்கில் முகிலைக் கிழிக்கும்.

மேற்கண்ட பாடலடிகளில் உள்ள **நனைந்திருந்தது** ,**குலைந்தன,இறங்கிய,தண்டுயர்ந்த** என்பன இறந்த காலத்தைக் காட்டுவனவாகவே உள்ளது என்பதால் இவை நன்னூல்,தொல்காப்பியம் கூறும் இலக்கண விளக்கங்களோடு ஒத்துப் போகின்றதை இதன் வழி நன்கு தெளியலாம்.

**செய்யும்**

**கொடிச்சிக் காக்கும் அடுக்கற் பைந்திணை**

**முந்து வினை பெருங் குரல் கொண்ட மந்தி (நற்.22-1,2)**

மலைப்பக்கத்தில் கொடிச்சியால் **காக்கப்படும்** பசிய திணைப் பயிரிலே உள்ள பெருங்கதிர்களை மந்திக் குரங்கு கொய்து கொண்டது.

**நுண் தாது உறைக்கும் வண்டினம் ஓப்பி (நற்.27-2)**

பூவின் நுண்ணிய தாதில் பாய்ந்து விழுகின்ற வண்டினங்களைப் போக்கி ஒழித்து என்று பொருள் கூறுகின்றது.மேற்கண்ட பாடலடிகளில் உள்ள **காக்கும்,உறைக்கும்** என்பன எதிர்காலத்தைக் குறிப்படவனவாகே இடம் பெற்றுள்ளதை அறிய முடிகின்றது.

மேலும், **நற்.28.-8,9 :33-3,4:34-7:45-84-8:107-5:319-9:132-5** போன்ற இன்னும் பல பாடல்களில் செய்யும் என்ற வாய்ப்பாட்டின்படி முடிகின்ற ஏராளமான பாடல்கள் உள்ளன.

**வினையெச்சம் – விளக்கம்**

ஒரு வினைமுற்றினை ஏற்று முடிவு பெறும் எச்சவினைச்சொல் வினையெச்சம் எனப்படும். இவை,1.தெரிநிலை வினையெச்சம், 2.குறிப்பு வினையெச்சம் என இரு வகைப்படும்.ஒரு வினைஎச்சம் காலத்தையும் செயலையும் உணர்த்தி நின்று ஒரு வினைமுற்றினைக் கொண்டு முடிவுறும் போது அது தெரிநிலை வினைஎச்சம் என்றும்.மாறாக அது காலத்தை வெளிப்படையாக உணர்த்தாமல் பண்பினை மட்டும் உணர்த்தி நின்று,ஒரு வினைமுற்றைக் கொண்டு முடிவுறும் போது அது குறிப்பு வினை எச்சம் என்றும் அழைக்கப்படுகிறது.

**செய்து செய்யூச் செய்பு செய்தெனச்**

**செய்யியர் செய்யிய செயின்செயச் செயற்கென**

**அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சுக் கிளவி (தொல்.223,பக்-114)**

**வினைமுதல் வினைகொண்டு முடியும் வினையெச்சம(தொல்.225,பக்-114)**

**நற்றிணையில் – வினையெச்சம்**

வினையெஞ்சு கிளவியாக செய்து முதல் செயற்கென என்பது வரை மொத்தம் ஒன்பதினைக் குறிப்பிடுகின்றது தொல்காப்பியம்.இவை ஒன்பதினுள் நற்றிணைப் பாடல்களில் இடம்பெற்றுள்ள வினையெச்சங்களைப் பற்றி இவ்விடம் ஆராய்கிறது.

**செய்து**

**பல்கதிர் மண்டிலம் பகல் செய்து ஆற்று**

**சேய்யுயர் பெருவரைச் சென்று அவன் மறைய (நற்.69-1,2)**

பல கதிர்களையுடைய சூரிய மண்டிலம் பகல் பொழுதை செய்து முடித்துத் தொலைவில் உள்ள மலையின் கண்ணே மறைந்தது.இதில் செய்து எனும் வினை எச்ச விகுதி **இறந்த காலத்தை** உணர்த்தி நின்றது.

**செய்யூ**

**கண்களி பெறூஉம் கவின் பெறுகாலை (நற்.56-3)**

கண்கள் கண்டுகளித்துமகிழும்அழகிய பொழுது என்று பொருள் விளக்கி நிற்கின்றது. இதில் பெறூஉ என்பது மகிழும் எனும் **எதிர்காலத்தைக்** காட்டி நிற்கின்றது.

**செய்பு**

**நறுநுதல் பசத்தல் அஞ்சிச்**

**சிறுமை உறுபவோ?செய்பு அறியலரே ( நற்.1-8,9)**

எனது நன்நெற்றியில் பசலைப் படறும் சிறுமையான செயலை என் தலைவர் ஒரு போதும் செய்யமாட்டார் என்பது பொருள்.இதில் **செய்பு** அமைப்புடைய வினை எச்சங்கள் பின்வருமாறு காலத்தைக் காட்டி நிற்கும் என்று இலக்கண உரையாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

**சேனாவரையர் -** நிகழ்காலம் உணர்த்தும் என்றும்,

**தெய்வச்சிலையார் –** வருகின்ற முறையினை வைத்து சூழ்நிலைக் கேற்ப முக்காலத்தையும் உணர்த்தி நிற்கும் என்றும்,

**நச்சினார்க்கினியர் –** பெரும்பான்மை நிகழ்காலத்தை உணர்த்தும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

உரையாசிரியர்களின் கருத்து பலவாக இருப்பினும் சங்க இலக்கியத்தைப் பொறுத்த வரையில் **செய்பு** அமைப்புடைய வினை எச்சங்களில் கால உருபன்கள் வெளிப்படையாக இல்லாவிடினும் அவை **இறந்த காலத்தையே** உணர்த்துகின்றன.

**செய்யியர்**

**கொண்டல் ஆற்றி விண்தலைச் செறீஇயர் (நற்.89-1)**

**வெள்வசிப் படீஇய (நற்.82-9**

கீழைக்காற்று வீசுவதால் மேகம் வானத்தில் செறிவுற்று காணப்படுகிறது எனும் பொருளில்ஆளப்படுகிறது.எனவே செய்யியர் எனும் அமைப்புடைய வினை எச்சங்களுக்கு செய்து எனும் அமைப்புடைய வினை எச்சமாகவே கொண்டுள்ளனர் என்பது தெரிகிறது.மேலும்,

**படீஇயர்** என்பதற்கு விழுந்தது என்று பொருள் தந்துள்ளார் உரைக்காரர்.

**செய்யிய**

**உரவுக் கடல் உழந்த பெருவலைப் பரதவர்**

**மிகுமீன் உணக்கிய புதுமணல் ஆங்கண் ( நற்.63-1,2)**

வலிமை மிக்க கடலில் சென்று மீன் பிடித்தலில் வருத்தமுற்ற பெரிய வலைகளைக் கொண்ட பரதவர் மிகுதியாகப் பெற்ற மீன்களை காயவைத்த மணற் பரப்பு என்று பொருள் கூறுகின்றது.இதில் செய்யிய என்பது **இறந்த காலத்தைக்** காட்டுகின்றது.இதே போன்று,

**பேடை நோக்கிய பெருந்தகு நிலையே ( நற்.21-12)**

இதில் வரும் **செய்யிய எனும் வினை எச்ச** அமைப்புடைய **நோக்கிய** எனும்சொல் **பார்ப்பாயாக** என்ற எதிர்காலத்தைக் குறிப்பிடுவதாகவே உள்ளது.

**செய**

**அலமரல் வருத்தம் தீர யாழ நின் ( நற் .9-3)**

**நீத்தல் ஓம்புமதி பூக்கேழ் ஊர ( நற். 10-4)**

பொழில் சூழ்ந்த ஊரையுடையவனே என்பதால்இதில் வரும் **யாழ,ஊர** என்று பயின்று சொற்கள் முன்னிலை அசை சொற்களாகவே இடம்பெற்றுஉள்ளன என்பது தெளிவு.

**செயற்கு**

**நாம் செலற்கு ஏமதி வலவ தேரே! உதுக்காண் (நற்.21-5)**

நாம் முன்னமே விரைந்து செல்ல தேரை தீண்டா வைமுள் கொண்டு செலுத்துக என்று தலைவன் பாகற்கு உரைப்பதாக இப்பாடல் விளக்கப் பட்டிருக்கும். இதில் **செலற்கு** எனும் வினையெச்ச அமைப்புடைய சொல் **செல்ல** எதிர்காலத்தை உணர்த்துவனவாகவே உள்ளது.

சேனாவரையரும்,தெய்வச்சிலையாரும் **'செயற்கு'** அமைப்புடைய வினைஎச்சங்கள் பெரும்பான்மையாக எதிர்காலத்தையே உணர்த்துவதாக குறிப்பிட்டுள்ளார்கள்.மேலும் இவ்வமைப்புடையச் சொல் இலக்கியத்தில் அதிகம் இடம்பெறுவதில்லை.பிற்கால இலக்கண நூலாசிரியரான நன்னூலார் இவ்வினை எச்சத்தினைக் குறித்துதொகுத்துக் குறிப்பிடவில்லை.**பெயர்வினை எச்சங்களின் பயன்பாடுகள்**;சங்க இலக்கியத்தில் எச்சச்சொற்கள் பயின்று வருகின்ற காரணத்தால் அந்தப் பாடல் எந்த சூழலில்,என்ன காலத்தில் பாடப்பட்டுள்ளது என்பதனை எளிதில் விளங்கிக் கொள்ள ஏதுவாக நிற்கின்றது.

**நிறைவுரை**

மேற்கண்டவிவரங்களின் அடிப்படையில் ஆராய்கின்ற பொழுது, நற்றிணையில் பெயரெச்சங்களின் வாய்பாட்டடிப்படையில் உற்று நோக்கினால் பெரும்பான்மையான பாடல்கள் **செய்த,செய்யும்** என்னும் வாய்பட்டினடிப்படையில் முடியும் பாடல் வரிகளே அதிகம்.வினையெச்சத்தினைப் பொருத்த மட்டில் பெரும்பான்மையான **வினையெச்ச வாய்ப்பாட்டுச்** சொற்கள் இடம்பெற்றுள்ளன என்பதை அறிய முடிகிறது.மேலும் ,இலக்கண உரையாசிரியர்களான **சேனாவரையர், தெய்வச்சிலையாரின், நச்சினார்க்கினியரின்** உரைவிளக்கங்களை பெரும்பான்மை பொருந்தியும்,சிறுபான்மை வேறுபட்டும் இருப்பதை இவ்வாய்வின் மூலம் தெரிய முடிகின்றது.

**துணைநின்ற நூல்கள்**

**1.தொல்காப்பியம் சொல்லதிகாரம் –இளம்பூரணர் உரை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,1987,சென்னை.**

**2.நற்றிணை மூலமும் உரையும்,உரை- கு.வெ.பாலசுப்பிரமணியன்,நியூ செஞ்சுரி புக்ஹவுஸ்,சென்னை - 2014.**